DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM.

<table>
<tr><td colspan="3">Case No</td><td>:</td><td colspan="3">O.S : 136/2019</td></tr>
<tr><td colspan="3">Deposition of Witness</td><td>:</td><td colspan="3">பி.சா. 2</td></tr>
<tr><td>Name</td><td>:</td><td>திரு. பாலசந்தர்</td><td colspan="2" rowspan="2">Occupation</td><td rowspan="2">:</td><td rowspan="2">முதுநிலை வருவாய் ஆய்வாளர், கும்பகோணம் தாலுக்கா அலுவலகம்</td></tr>
<tr><td>Father's Name/ Husband</td><td>:</td><td>நெடுமாறன்</td></tr>
<tr><td>Village</td><td>:</td><td></td><td colspan="2" rowspan="2">Age</td><td rowspan="2">:</td><td rowspan="2">29</td></tr>
<tr><td>Taluk</td><td>:</td><td>கும்பகோணம்</td></tr>
</table>

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act,1969 (Act 44 of 1969). 23-10-2025

**முதல் விசாரணை**

நான் கும்பகோணம் வட்டாட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் . இந்த வழக்கில் சாட்சியமளிப்பதற்காக எனக்கு வட்டாட்சியர் கொடுத்த கடிதம் **எக்ஸ் 1 ஆகும்**. சோழபுரம் கிராமம், புல எண் 78–ற்கான கணினி சிட்டா, ஆ பதிவேடு நகல், புல வரைபடம், அடங்கல் மற்றும் சிட்டா நகல் ஆகியவை **எக்ஸ் 2 ஆகும்.** இதற்கான அசல் ஆவணங்கள் இன்று நீதிமன்றத்திற்கு கொண்டு வந்து காண்பித்து ஒப்பீடு செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

ஆ பதிவேடு எந்த வருடம் ஏற்பட்டது என்றால் தெரியாது. புல எண் 78 என்பது 28 ஏர்ஸ் மொத்த விஸ்தீர்ணம். அந்த புல எண் மகாலிங்கம், காத்தான், நாகராஜன் ஆகியோர் பெயரில் உள்ளது . அதில் யார் யார் பெயரில் எவ்வளவு விஸ்தீர்ணம் என்று தனித்தனியாக குறிப்பு இல்லை . கூட்டாக தான் உள்ளது. காத்தான் என்பவரிடமிருந்து பிரதிவாதி சாந்தி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் தெரியாது . சிட்டாவில், மகாலிங்கம் மனைவி கருப்பாயி , மகாலிங்கம் மகன் காத்தான் , காத்தான் என்று குறிப்பிட்டு, காத்தான் பெயர் நீக்கம் செய்யப்பட்டு , முகமது அலி மகன்

தாஜுதீன், ஜீவாநந்தம் மனைவி சாந்தி ஆகியோர் பெயர் உள்ளது . சாந்தி எவ்வளவு விஸ்தீர்ணம் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை . அடங்கல் 1433 க்கான பசலிக்கானது. அதில் கருப்பாயி வகையறா என்று உள்ளது. யார் யார் என்று பெயர் இல்லை . நாளைய தேதியில் அந்த சொத்துக்கள் யாரிடம் உள்ளது என்று எனக்கு தெரியாது . கிராம நிர்வாக அலுவலரை தான் கேட்க வேண்டும்.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.